இ

இலஞ்சம் தவிர்! நெஞ்சம் நிமிர்!

களம் -21 வெற்றி -2

# நேர்மை நெறி

பிப்ரவரி 2022

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

(Reg.No.349/2001)

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

**(NERMAI NERI)**

Rs.10

## இழி வழியில் வந்த பணம் இன்னலே தரும்
## நல்வழி வந்த பணம் நன்மையே செய்யும்.



## நல் வழியில் பணம் ஈட்டி நலமுடன் வாழ்வோம்

PUBLISHED BY

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம்:

155, "நம்பகம்", கொன்னூர் நெடுஞ்சாலை,

அயனாவரம், சென்னை-600023

Phone : 8778312823

E-mail : acmchennai2001@yahoo.com

website : anticorruptionchennai.com

# தலைவர் மடல்

**அன்பார்ந்த உறுப்பினர் சகோதர சகோதரிகளே** !

**வணக்கம்.** இம்மடல் மூலம் மீண்டும் உங்களை தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். செனற இதழில் இம்மடல் மூலம் தங்களனைவரையும் சந்திக்க இயலாமைக்கு வருந்துகிறேன்.

**எச்சரிக்கை:** கொரோனா ஓரளவுக்கு கட்டுக்குள் வந்துவிட்டது என்றே நினைக்கிறேன். எனினும் அனைவரும் கொரோனா வழிக்காட்டு நெறிகளை தவறாமல் கடைபிடிக்க அன்புடன் வேண்டுகிறேன்.

**மத்திய பட்ஜெட்** :இந்திய அரசின் 2021-22-**ம்** வருடாந்திர நிதி நிலை அறிக்கை/வரவு செலவு கணக்கு தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. வழக்கம் போல் ஆளும் கட்சியினர் இந்த நிதி நிலை அறிக்கையை இந்திய நாட்டிற்கு விடிவெள்ளி என்று வானளாவ புகழ்வதையும், எதிர் கட்சிகள் அதை எள்ளி நகையாடுவதையும் நாம் காண்கிறோம். ஆண்ட கட்சிகளும் ஆளும் கட்சியும், நாட்டின் வருவாயில் 20 சதவீதம் பெற்ற கடன் தொகைக்கான வட்டிக்காக சென்றுவிடுகிறதே, இதைக்குறைக்க என்ன செய்வது என்ற விவாதம் எதுவுமே செய்யவில்லை. இந்நிலை நீடிப்பின், கடன் சுமையை ஆளும் கட்சி மேலும் அதிகரித்து வருவாயில் 50% வரை வட்டிகட்டவே சென்றுவிடும் என்பது திண்ணம். மேலும் நிதி நிலை அறிக்கையின் படி, ஒரு ரூபாய் வருமானத்தில். 35 பைசா வருமானம் கடன் மூலம் பெறப்படுகிறது என்பது வெட்கக்கேடு. இந்த ஒரு ரூபாய் வருமானத்தில் வட்டிக்கு செல்வது 20 பைசா. ஆக, வட்டிக்கே ஒரு ரூபாயில் 20 பைசா சென்றால், மூலக்கடன் எவ்வளவு இருக்கும் என்பதை நினைத்தாலே தலை சுற்றுகிறது. இதுகுறித்து எந்த விவாதமும் நடக்கவில்லை. வெட்டி விவாதங்கள் தொலைக்காட்சிகளில் நடக்கும்போது, நாட்டின் எதிர்காலத்தை சீர்குலைக்கும் கடன்சுமை குறித்த விவாதங்களை கானமுடியவில்லை. எதிலும் ஒரு உள்நோக்கம்.

பி.ஜே.பி. ஆட்சிக்கு வருமுன், 2013-14 பட்ஜெட்டில் இருந்த நிலை யாதெனில், ஒரு ரூபாய் வருமானத்தில், கடன் மூலம் பெற்றது 27 பைசா; மேலும் ஒரு ரூபாய் செலவில், வட்டிக்காக செலவிடப்பட்டது 18 பைசா. ஆக, "யாம் ஆட்சிக்கு வந்தால், ஊழலை ஒழிப்போம்; நாட்டில் பாலாறும் தேனாறும் ஓடும்" என்று வாகுறுதி அளித்து மக்கள் ஓட்டு பெற்று ஆட்சியில் இருக்கும் பி.ஜே.பி.யின் ஆட்சி, கடன் பெறும் தொகையை குறைக்காமல், ஒரு ரூபாய்க்கு, 27 பைசாவாக இருந்ததை 35 பைசாக்கிவிட்டது மாபெரும் கொடுமை. இதனால், ஒரு ரூபாயில் வட்டிக்கு ஆகும் செலவு, 18 பைசாவிலிருந்து தற்போது 20 பைசாவாக உயர்ந்துள்ளது. ஆக பொய் வாக்குறுதி கொடுத்து மக்களை ஏமாற்றி ஆட்சி கட்டிலில் பி.ஜே.பி அரசு அமர்ந்துள்ளது தெளிவாகிறது. மேலும், வெளி நாட்டில் பதுக்கி வைத்துள்ள கருப்பு பனத்தை இந்தியாவுக்கு கொண்டு வந்தால் இந்தியாவின் கடன் சுமையை முற்றிலும் நீக்கியிருக்கலாம். இந்த வாக்குறுதியையும் பி.ஜே.பி அரசு நிறைவேற்றவில்லை. மக்களின் உணர்வுகளை தூண்டிவிட்டு பயன் பெறும் வாகுறுதியான ராமர் கோவில் கட்டுவது மற்றும் காசி விசுவநாதர் ஆலயப்பணிகள், வல்லபபாய் பட்டேலுக்கு சிலை என வளர்ச்சிக்கு பயனளிக்காத திட்டங்களைத்தான் செயலாக்குகிறது. மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டியே ஆட்சியில் தொடர்ந்துவிடலாம் என்பது 21ம் நூற்றாண்டிலும் தொடர முடிகிரது என்றால், இந்த நாட்டு மக்களின்

அறியாமைமையயே நொந்து கொள்ள வேண்டியுள்ளது. இந்திய அரசமைப்பு சட்டம் மக்கள் எதையும் அறிவியற் பூர்வமாக பார்க்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. ஆனால், அறிவியற் பூர்வமான சிந்தனையே மக்களிடம் எழாமல் வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், நாமும், வெட்கமின்றி 75 ஆண்டு சுதந்திரதினத்தையும், 73வது குடியரசுதினத்தையும் கொண்டாடிவிட்டோம், சுதந்திரத்தின் நோக்கம் என்னவென்று தெரியாமலேயே!. மக்களின், இந்த அறியாமைதான் இந்த அரசியல்வாதிகளின் பலமாக இருக்கிறது.

**தந்தை பெரியார் தீர்க்கதரிசி தானோ?** தந்தை பெரியாரைப்போன்ற தலைவர்கள், இந்தியர்கள் சுதந்திரத்திற்கு தகுதியற்றவர்கள் என்று சுதந்திரம் பெறுவதை எதிர்த்ததிலும் ஒரு தொலைநோக்கு பார்வை இருப்பதாகத்தான் வேதனையுடன் யோசிக்கத்தோன்றுகிறது. பணம் பெற்றுக்கொண்டு வாக்களித்து மக்களாட்சி தத்துவத்தையே கேலிக்குள்ளாக்கி யுள்ளனர், குறிப்பாக தமிழக மக்கள். ஆகா, நம் மக்கள், சுதந்திரம் பெற்று சுயாட்சி நடத்த தகுதியற்றவர்கள் என்பது நிருபனம் ஆகிவிட்டது. மேலும், தமிழகத்தைத் தொடர்ந்து மாறி மாறி ஆட்சி செய்யும், அ.தி.மு.க மற்றும் தி.மு.க கட்சிகள், தேர்தல் அறிக்கையில், ஒவ்வொரு வீட்டுக்கும்/குடுமப அட்டைக்கும் பணம் தருவதாகவும், பொங்கல் இலவசங்கள் உயர்த்தப்படும் என்பன போன்ற வாக்குறுதிகளை வாரி வீசி இருகட்சிகளும் வெற்றி பெற்றுள்ளனர். இலவசங்களை வழங்குவது என்பது பிச்சை போடுவதாகும் அதை வெட்கமின்றி பெறுபவர்கள் பிச்சைக்காரர்களே ஆவர். ஆக, சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகள் கழித்தும் நம் மக்கள் பிச்சைக்காரர்கள் ஆக்கப்பட்டுள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மை. ஒரு குடும்பம் ஒரு விபத்தாலோ, வியாதிகளினாலோ, வறுமை கோட்டிற்குக்கீழ் தத்தளித்தால், அவர்களுக்கு உதவ வேண்டியது அரசின் கடைமை, ஏன் ஒவ்வொரு மனசாட்சி உள்ள குடிமகனின் கடமையாகும். ஆனால், எல்லா வசதியும் வாய்ப்பும் இருந்தும், வருமான வரிக்கட்டிவருபவர்களும் இலவசம் பெறுபவது என்பது லஞ்சம் பெறுவதற்கு ஒப்பானதே. இந்த கேவலமான மனநிலைக்கு மக்களைக் கொண்டுவந்த அரசியல் தலைவர்களுக்கு மாலையும் மரியாதையும் செய்யும் மக்கள்!. ஒரு நல்ல தலைவர், மக்கள் சுயமாக தம் காலில் நிற்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமே தவிர, இலவசங்களை அள்ளி வீசி ஆட்சியை பிடித்து கொள்ளையடிக்க நினைப்பது ஜனநாயகத்தையே கொலை செய்வதாகும். வலிய வந்து சுயமாக, பல்வேறு பொது நல வழக்குகளை முன்னெடுக்கும் நீதிமன்றங்கள், இது போன்று அரசியல் கட்சிகளின் அவலங்களைத் தடுத்து நிறுத்த முயல்வதில்லை.

**பொதுத்துறை நிறுவனகளை விற்பதில் ஊழல்/முறைகேடு:** இது இவ்வாறிருக்க, தற்போது மத்திய அரசானது, லாபத்தில் இருக்கும் மத்திய அரசு பொது நிறுவனங்ககளைக் கூட தனியாருக்கு விற்பதில் முனைப்பு காட்டுகிறது. இதில் வேதனையாதெனில், கொள்ளை லாபத்தில் இயங்கும் நிறுவனங்களையும் அடிமாட்டு விலைக்கு விற்க முனைவதுதான். குறிப்பாக, “Central Electronics Ltd” என்ற பொதுத்துறை நிறுவனத்தை ரூ.210 கோடிக்கு விற்க முடிவெடுத்துள்ளதாக செய்திகள் வந்துள்ளன. இந்நிறுவனம், 120க்கும் மேல் பொறியாளர்களை கொண்டு இயங்கும், இலாபமீட்டும் நிறுவனமாகும். இதில் அரசின் மூலதனம், சுமார் 77.00 கோடி. என்று தெரிகிறது. இந்நிறுவனத்தின், 31.03.2021 டுடன் முடியும் ஆண்டு லாபம் மட்டும் ரூ.23.00 கோடிக்கும் மேல். இந்த நிறுவனத்திற்கு

தற்போது கையில், ரூ.1592 கோடி அளவுக்கு கான்ட்ராக்ட் கிடைத்துள்ளது. இதை செயலாக்கினால், சுமார் ரூ.700 கோடிக்கும் மேல் மொத்த லாபமும், அனைத்து செலவுகளும் போக, ரூ.300 கோடிக்குமேல், நிகர லாபம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது இப்படி யிருக்கையில், வெறும் ரூ.210 கோடிக்கு விற்க முனைவது பகற்கொள்ளையாகவே எமது பார்வையில் தெரிகிறது. மேலும் இதை வாங்கும் நிறுவனம், எந்த வித தொழில்நுட்ப அறிவும் இல்லாத ஒரு நிதி நிறுவனமாகும். இது தேச நலனுக்கு பாதமகமான செயலாகும். 1990 க்குப் பிறகு, உலகமயமாக்கம் என்ற போர்வையில் அரசு நிறுவனங்களை அடிமாட்டு விலைக்கு காங்கிரஸ் அரசாங்கம் விற்றதையே பி.ஜே.பி அரசும் அதி தீவிரமாக செய்கிறது. ஆக தேச நலனையே காவு கொடுத்து கொள்ளையடிப்பதில் இரு அரசியல் கட்சிகளுக்கும் எந்த ஒரு வித்தியாசமுமில்லை. தமிழ்நாட்டில் மக்கள் சொத்துக்களான, ஆற்றுமணல், கனிமங்களை இஷ்டம்போல் விற்றதைப்போலவும், டான்சி நிலம் விற்றதைப் போலவும்தான். ஆக, எந்த கட்சியும் இதற்கு விதிவிலக்கில்லை என்பதுவே உண்மை. மக்கள் இதையெல்லாம் தெரிந்தும் தமக்கும் இதற்கும் சம்பதமில்லை என்பது போல் காசு கொடுத்தால் ஓட்டு என்று தமது பங்குக்கு ஊழலில் பங்கு வாங்கிகொள்கின்றனர். இதுதான் இந்திய ஜனநாயகம். இந்த ஜனநாயகத்தைதான் ஆண்டு தோறும் கோடிக்கணக்கில் செலவு செய்து கொண்டாடி மகிழ்கிறோம். இந்த அவநிலயில் தான் நாம் செயல்பட வேண்டியுள்ளது. இதைத் தான் நாம் சரி செய்ய வேண்டும். இவ்வளவு கொடுமைகளையும் தாண்டியே நம் இயக்கம் செயல்பட வேண்டியுள்ளது. இதைக் காண சகிக்காத பல அறிவு ஜீவிகள் வெளிநாட்டில் பணிக்கு சென்று அங்கேயே குடியுரிமை பெற்று தங்கிவிடுகின்றனர். ஆனால், நமது உடன்பிறப்புகள் சரியில்லையேல் சரி செய்ய உயிருள்ளவரை போராட வேண்டுமே ஒழிய, அவர்களை விட்டுவிட்டு சுயநலநோக்கில் சென்று சுக வாழ்க்கையில் ஐக்கியம் ஆகிவிடுவது அழகல்ல. இது போன்ற அவல நிலையை எதிபார்த்துத்தான், அரசியலமைப்பு சட்டத்தின்படி, ஆளும் அரசியல் கட்சி செயல்படுகிறதா என்று சீர்தூக்கிப்பார்த்து, எங்கெல்லாம், அரசமைப்பு சட்டம் மீறப்படுகிறதோ, அந்த மீறலை சரிசெய்து மீண்டும் அரசியலமைப்பு சட்டத்தை அதன் பாதையில் நிலைநிறுத்தும் பொறுப்பையும் கடைமையையும் மக்கள் உயர் மற்றும் உச்ச நீதி மன்றங்களிடம் ஒப்படைத்துள்ளார்கள். ஆக, அரசியலமைப்பு சட்டம் எதிபார்த்தபடி அரசாங்கம் செயல்படவில்லையேல், அதற்கு முழுக்காரணம் நீதிமன்றங்களே, என்பது எமது கருத்து. எந்த ஒரு வழக்கு விசாரிக்கப்படும்போதும், தவறான அரசாணையை ரத்து செய்வதோடு, தவறான ஆணையை பிறப்பிக்கக் காரனமாக. இருந்தவர்களுக்கு நீதிமன்றம் அபராதம் விதித்து அநியாயமாக அலைக்கழிக்கபட்ட பாதிக்கப்பட்டவருக்கு நஷ்ட ஈடு வழங்கினால் மட்டுமே இது போன்ற ஊழல்கள் பெருமளவு குறைய வாய்ப்புண்டு. எனவே, இதை சரிசெய்ய சட்டபோராட்டமும் நாம் நடத்த வேண்டும். இதன் தொடக்கமாகத்தான், தற்போதைய திமுக அரசின் மின்துறை அமைச்சர், 2014ல், அதிமுக அரசில் போக்குவரத்துத்துறை அமைசராக இருக்கும் போது பணியாளர்கள் நியமனத்தில் லஞ்சம் பெற்றதற்காக அவர்மீது போடப்பட்ட வழக்கை, பணத்தை திருப்பிகொடுத்துவிட்டதாக கூறிய காரணத்தால் அவ்வழக்கை உயர்நீதிமன்றம் ரத்து செய்ததை எதிர்த்தும், இன்னும் இது போன்ற அவர் மீதுள்ள பல வழக்குகளை ரத்து செய்யும் நிலையிலிருந்து தடுக்கவும், நம் இயக்கம், இவ்வழக்குகளில் நம்மையும் கேட்கவேண்டும் என்பதால், நம்மையும் இவ்வழக்குகளில் எதிர்மனுதாரராக சேர்க்க

வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளது. ஆனால், இந்த சாதாரண மனு, வாதங்கள் முடிந்த பிறகும், தீர்ப்பு வழங்கபடாமல் தள்ளி வைக்கப்பட்டுக் கொண்டே வரப்படுகிறது. இதனால், பல கோடி ரூபாய் லஞ்சம் பெற்ற ஒருவர் நமக்கு அமைச்சராக உள்ளார். எனவே, நீதித்துறையின் காலதாமதத்தை அரசியல் வாதிகள், தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு சாகும் வரை ஜெயலலிதாவைப் போல் காலதாமதப்படுத்தி நீதியையே கேலிக்குள்ளாக்கி விடுகின்றனர். எது எப்படி இருப்பினும், நாம் மன சோர்வின்றி, அறவழியில் நமது இலக்கை நோக்கி தொடர்வோம்.

**ஒன்றுபடுவோம்! சட்டப்படி போராடுவோம்!! வெற்றி பெறுவோம்!!!.**

**நன்றி! வணக்கம்!!.**

அன்புடன்,
(ந.சுப்ரமனியன்)

---

## திரு.வி.செந்தில் பாலாஜி, தமிழக மின்வாரிய அமைச்சர் மீதுள்ள ஊழல் வழக்குகளை ரத்து செய்வதை எதிர்த்து தொடுக்கப்பட்ட நமது வழக்கின் இன்றைய நிலை

**வழக்கு விபரம்**: திரு.வி.செந்தில் பாலாஜி, தற்போது திமுக அரசின் மின்வாரியத்துறை அமைச்சர் அவர்கள், 2014ல் அதிமுக ஆட்சியில், ஜெயலலிதா தலைமையிலான ஆட்சியில் போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த பொழுது, போக்குவரத்து கழகங்களுக்கு ஓட்டுனர்கள், நடத்துனர்கள், தொழிநுட்பப் பணியளர்கள், இளநிலைப் பொறியாளர்கள் மற்றும் உதவிப்பொறியாளர்கள் நியமனத்தில் லஞ்சம் வாங்கிக்கொண்டு பலருக்கு பணியும் வழங்காததால், லஞ்சம் கொடுத்தவர்கள் புகார்கள் பல கொடுத்தும் அவர்மீது வழக்குகள் பதியவில்லை. அப்புகார்கள் உயர்நீதிமன்றம் சென்றபின் வேறு வழியின்றி, அவர் மீதும் குற்றவியல் வழக்குகள் போடப்பட்டன. காவல் புலனதிகாரி சரியாக புலன் விசாரனை அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததால், மீண்டும் உயர்நீதிமண்றம் சரியாக விசாரிக்குமாறு உத்திரவிட்டபின், உரிய முறையில் புலன் விசாரனை செய்து, முதற்கட்டமாக, இளநிலைப்பொறியாளர்கள் பணிநியமன ஊழல் குறித்த புலனாய்வு அறிக்கை மட்டும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில்-

1. ஒவ்வொரு பணிநியமனமும் அமைச்சர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட இமெயில் பட்டியலில் இருந்த பெயர்களுக்கே பணிநியமனம் செய்யப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது;
2. அமைச்சர் அலுவலக கம்புயுட்டர் மற்றும் அதன் “hard disk” கைப்பற்றப்பட்டு இது உறுதி செய்யபட்டுவிட்டது
3. போக்குவரத்து கழகங்களிலின் கம்ப்யூட்டர்களில் அமைச்சர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட இமெயில் களையும் கண்டறிந்து அந்த கம்புயூட்டர் மற்றும் அதன் hard disk களும் கைப்பற்றப்பட்டுவிட்டன;
4. கல்லூரியில் டிப்ளமோ படிப்பில் பெற்ற மதிப்பெண்களுக்கு 75% மதிப்பெண்ணும், இன்டர்வியுவுக்கு 25% மதிப்பெண்களும் அளித்து, இரண்டையும் சேர்த்து அதிக மதிப்பெண்கள் பெறுபவர்களே நியமிக்கபடுவார்கள் என்பது பணிநியமன விதிமுறையாகும்.
5. அமைச்சர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பெயர்களை பணிநியமனம் செய்பவதற்காக, தகுதி நிறைந்த மாணவர்களின் மதிபெண்களை குறைத்துக்காட்டி,

நிராகரிக்கப்பட்டுள்ளதும் புலன் விசாரனை அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ள போட்டியாளார்களின் மதிப்பெண்கள் பட்டியலை பார்த்தாலே தெரிகிறது.

**உதாரணம்:** இளநிலை பொறியாளர்கள் நியமனத்தில் கலந்து கொண்ட ஒரு மாணவர் பெயர் திரு.நம்பிவெங்கடேஷ் ஆகும். இவர் பெற்ற டிப்ளமோ மதிப்பெண்கள் 1200க்கு 996 ஆகும். ஆக, 75க்கு, 996/120075 = 62.25ஆகும். இவருக்கு நேர்முகத்தேர்வில் அளிக்கப்பட்ட மதிப்பெண்கள் 25க்கு 25 ஆகும். ஆக, பணிநியமனத் தேர்வில் இவர் பெற்ற மொத்த மதிப்பெண்கள்-62.25+25=87.25 ஆகும். ஆனால், இவரது, இந்த மதிபெண்களை, 44+3= 47 என்று குறைவாக பதிவு செய்து இவரை நியமனம் செய்யாமல், இவரை விட குறைந்த மார்க்குகள் எடுத்த அமைச்சர் சிபாரிசு செய்த மாணவர்ககளை பணிநியமனம் செய்துள்ளது பச்சையாக தெரிகிறது. பணிநியமனம் செய்யப்பட்ட 33 பேர்களில், முதலாவதாக நியமிக்கப்பட்டவர், திரு. எஸ்.ரமேஷ் என்பவர் ஆகும் இவர், எடுத்த கல்லூரி மார்க் 1200க்கு 1020 ஆகும். ஆக, 75%க்கு, 63.75 அகும் இவரது நேர்முக தேர்வு மதிப்பெண்கள்-23 ஆகும். அக இவர்பெற்ற மொத்த மதிப்பெண்கள்-63.75+23=86.75 ஆகும். அதாவது, நம்பி வெங்கடேஷை விட 0.50 மதிப்பெண்கள் குறைவாக மதிபெண்கள் பெற்றுள்ளார் ஆனால், இவர்தான் முதலாவதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இது போன்று அதிக மதிபெண்கள் பெற்றவர்கள் நிராகரிக்கபட்டுள்ளார்கள். ஆக, ஊழல் நடந்துள்ளது தெள்ளத் தெளிவாக புலன் விசாரணை அறிக்கையில் இருந்து நிரூபிக்கப்பட்டுவிட்டது என்பதும் அதிலிருந்து தப்பிக்கவே முடியாதும் என்பது சிறு குழந்தைக்கும் தெரியும்.

6. இதிலிருந்து தப்பிக்க, புகார் கொடுத்தவர்களுக்கு லஞ்சப்பணத்தை திருப்பிக் கொடுத்துவிட்டு, அமைச்சர் பதவியை உபயோகித்து, அவர்களை, “லஞ்சப்பணம் திரும்பக் கிடைத்துவிட்டது, எனவே, லஞ்ச வழக்கை ரத்து செய்வதில் ஏங்களுக்கு ஆட்சபனை இல்லை” என்று சத்தியபிராமன பத்திரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வித்து, ஒரு வழக்கை ரத்து செய்துவிட்டு அடுத்த வழக்குகள் ரத்து செய்வதற்காக வரிசை கட்டி நின்றபோதுதான் நம் இயக்கம் இடைமறித்து இதுநாள் வரை தடுத்து நிறுத்தியுள்ளது. இது ஒரு தொடர் சட்டப் போராட்டம். வழக்கும, 04.02.2022, விசாரனைக்கு வந்தது, ஆனால் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அநேகமாக, அடுத்த வாரம் எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கிறோம். தர்மம் நிலை நிறுத்தப்படும் என்ரு நம்புவோமாக!

---

**<u>நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்</u>**

**<u>ஆப்ரஹாம் லிங்கன் கற்ற கல்வி</u>**

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கன் (பதவிக் காலம் 1861-1865), தனது 15ம் வயதில் கல்வி கற்கத்தொடங்கினார். அப்போது காகிதம் பயன் பாட்டுக்கு வராத காலம்.

அதனால், அப்ரஹாம் லிங்கன் ஒரு மரப்பெட்டியின் மூடியில் கரித்துண்டினால் எழுதி பாடம் படித்து வந்தார். மேலும் அவர் ஏழ்மையான குடும்ப சூழலில் மிகவும் பின் தங்கி இருந்ததால்., பாடப் புத்தகங்களை விலை கொடுத்து வாங்கிப் படிக்க அவரால் முடியவில்லை. ஆகவே, பல புத்தகங்களை இரவல் வாங்கிப் படித்தார்.

ஒரு சமயம் இரவலாக வாங்கிக்கொண்டு வந்த புத்தகம் மழையில் நனைந்து கிழிந்து விட்டது. . அதனால் நூலின் சொந்தக்காரருக்கு புதிய நூலை வாங்கிக் கொடுக்க முடியவில்லை

அதற்குப் பதிலாக நூலின் சொந்தகாரர் நிலத்தில் மூன்று நாட்கள் வேலை செய்து ஈடு கட்டினார்.

# அறிவிக்கப்பட்ட 2022-23 ஆண்டு பட்ஜெட்டில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்கள்

V கார்த்திகை ராஜன்
பொது செயலாளர்

**மொத்த வருமானம் : ரூ 22, 84 லட்சம் கோடி; மொத்த செலவு : ரூ 39.45 லட்சம் கோடி பற்றாக்குறை : ரூ 16.61 லட்சம் கோடி; பொதுதுறை பங்குகள் விற்றல்: ரூ 65,000 கோடி**

- 5ஜி அலைகற்றை ஏலம்: 2022-23 நிதியாண்டில் 5ஜி சேவையை வழங்க முடிவு; இதற்கான அலைக்கற்றை ஏலம் விடும் பணிகள் நடைபெற்று வருகிறது.
- டிஜிட்டல் கரன்சி: பிட்காயின் போன்ற இந்தியாவின் டிஜிட்டல் கரன்சிக்கு மத்திய அரசு அனுமதி. ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதலின் மற்றும் விதிமுறைகளின் கீழ் புதிய டிஜிட்டல் கரன்சி அறிமுகப்படுத்தப்படும்.
- ஆத்ம நிர்பார் திட்டம்: 25,000 கி.மீ. தொலைவுக்கு புதிய தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்படும்; ஆத்மநிர்பாரின் ஒரு பகுதியாக உலகத்தரம் வாய்ந்த உள்நாட்டு தொழில்நுட்பமான KAWACH இன் கீழ் 2000 கி.மீ தூரம் சாலை 2022 - 23 இல் கொண்டு வரப்படும்.
- இ பாஸ்போர்ட்: இ பாஸ்போர்ட் வரும் நிதியாண்டிலிருந்து வழங்கப்பட உள்ளது; இதில் உள்ள சிப், சர்வதேச பயணங்களை எளிதாக்கும் வகையில் வடிவமைக்கப்படும்.
- டிஜிட்டல் பல்கலைக்கழகம்: கற்றல் இடைவெளியைக் குறைக்க ஒரு நாடு ஒரே தொலைக்காட்சி திட்டம், மாணவர்களுக்காக டிஜிட்டல் பல்கலைக்கழகம், வேளாண் பல்கலைக்கழக பாடத்திட்டங்களை மேம்படுத்துதல் என கல்வித் துறை சார்ந்த அறிவிப்புகளை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்துள்ளார்.
- கிசான் ட்ரோன்கள்: விவசாய நிலங்களை கிசான் டிரோன் திட்டம் கொண்டு வரப்படுகிறது. டிரோன் மூலம் நிலங்களை அளப்பது மற்றும் வேளாண் விளைச்சலை கணிப்பது போன்ற பணிகளுக்கு கிசான் ட்ரோன் திட்டம் பயனளிக்கும் என்றும் அமைச்சர் அறிவிப்பு.
- பிரதமர் ஆவாஸ் யோஜனா: பிரதமர் ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் 80 லட்சம் புதிய வீடுகள் கட்டப்படும்
- 22,000 கி.மீ. தொலைவுக்கு சாலை: நாடு முழுவதும் அடுத்த நிதியாண்டில் 22,000 கி.மீ. தொலைவுக்கு சாலை கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படும் என அறிவித்துள்ளார்.
- தொலைபேசி மூலம் கவுன்சிலிங் பெறும் வகையில் தேசிய மனநல சுகாதார திட்டம் தொடங்கப்படும்
- பிரதமர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ரூ.48,000 கோடி, வரும் நிதியாண்டில் ஒதுக்கப்பட்டு வீடுகள் கட்டப்படவுள்ளன. ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் இணைப்பு திட்டத்தின்கீழ் 60,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது; 3.8 கோடி இல்லங்களுக்கு இணைப்பு வழங்கப்படவுள்ளது
- 75 மாவட்டங்களில் அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகளின் கிளைகள் துவக்க திட்டம்.
- 1 முதல் 12ஆம் வகுப்பு வரை தாய்மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.
- மாநிலங்களுக்கு 1 லட்சம் கோடி ரூபாய் வட்டியில்லா கடன் வழங்கப்படும்.
- பாதுகாப்புத் துறைக்கு தேவையான 68% தளவாடங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய நடவடிக்கை. சூரிய சக்தியை ஊக்குவிக்க 19,500 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

பசுமை திட்டங்களை நடைமுறைப் படுத்த பசுமை பத்திரங்கள் மூலம் நிதி திரட்டப்படும்.

- ஒரே நாடு, ஒரே பதிவு திட்டத்தின் கீழ் மாநில பதிவு தரவுகள் அனைத்தும் ஒரே குடையின் கீழ் இணைக்கப்படும் - நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்
- இரண்டாம் தர மற்றும் மூன்றாம் தர நகரங்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்தப்படும். நவீன வீடுகள், பொது போக்குவரத்து மேம்படுத்தப்படும். 80 லட்சம் பேருக்கு இந்த நிதியாண்டில் அனைவருக்கும் வீடு திட்டம் செயல்படுத்தப்படும். நகர்புறங்களில் உள்ள நடுத்தர மக்கள் இதனால் பயன் பெறுவார்கள் என நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவிப்பு.
- தபால் நிலையங்கள் அனைத்தும் வங்கிகளுடன் இணைக்கப்படும். இதன் மூலம் தபால் நிலைங்களில் ஏ.டி.எம், ஆன்லைன் பரிவர்த்தணை செய்யப்படும். இது ஊரக பகுதி மக்களுக்கு பயன்படும் - நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்
- திருத்தப்பட்ட வருமான வரி கணக்கை இரண்டு ஆண்டுகளுக்குள் தாக்கல் செய்ய வரி செலுத்துவோருக்கு வாய்ப்பு. கூடுதல் வருமானத்தை கணக்கில் காட்டி கூடுதல் வரி செலுத்த விரும்புவோர் இந்த திருத்தப்பட்ட கணக்கு தாக்கல் செய்யும் வசதியை பயன்படுத்திக்கொள்ளலாம்.
- **வருமான வரி விலக்கு உச்ச வரம்பில் மாற்றமில்லை**

**நமது கருத்துக்கள்:-** வணிக கடன்கள் அதிகம் கிடைக்க வழி செய்ததினாலும், நிறுவன வரிக் குறைப்பினாலும் பெறுவணிகர்கள் **(Corporates),** மற்றும் பெரும் செல்வந்தர்கள் பயனடைவார்கள். வங்கியில் வாங்கிய கடன் தள்ளுபடியாகுமானால், வங்கியில் சேமிப்பவர்கள் ஏமாற்றமடைவர். பணம் பெரும்பணக்காரர்களிடம் செல்வதால், நாடு கடனில் மூழ்கும்.

டிஜிட்டல் கரன்சி சூதாட்டமாக நிறைவேறும், சாரதாரண மக்கள் இலவசத்தையும், கடன் தள்ளுபடிகளை நம்பி சோம்பேறிகளாவர். ஏமாற்றி வாழ்வது பெருகும்

வருமான வரியில் 8 வருடங்களாக மாற்றம் இல்லாததால், நடுத்தர வர்க்கத்தினரின் வருமான வரித்தொகை உயரும். வருமானவரி வரம்பு, பணவீக்கம் அளவுக்கு உயர்த்தப்படாததால், வருமான வரி கட்டுவோர்கள் எண்ணிக்கை கூடும்

ஏழைகள் மேலும் ஏழைகளாவார்கள்: செல்வந்தர்களின் வருமானம் அதிகரிக்கும் மொத்தத்தில் இது கார்பரேட்காரர்களுக்கு மிகுந்த செல்வத்தைக் கொடுக்கும்

இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு **80 (G)** யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

---

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**

**விளம்பரக்கட்டண விவரம்**

**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**

**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது**

**நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

# எளிமை தான் வாழ்வின் இனிமை…

1) எளிமை என்பது தோற்றத்தில் மட்டுமல்ல எளிமை என்பது மனதிலும் சுபாவத்திலும் புத்தியினுடைய அகங்காரமற்ற தன்மையிலும் கலந்து இருப்பதாகும்.எளிமை என்பது தோற்றத்தை அல்ல உயர்ந்த பண்பை வெளிப்படுத்துவதாகும். எளிமை என்பது அசுத்தம் அல்ல அது சுத்தத்துடன் கூடிய தனித்தன்மையாகும்.

2) எளிமை நல்ல மனிதர்களை அருகில் வரச் செய்வதாகும். எளிமை அடக்கத்துடன் கூடியது. அடக்கம் இருக்குமிடத்தில் அமைதி இருக்கும் அதில் எளிமை ஜோதியாக சுடர்விடும். எளிமை என்பது ஏழ்மை தன்மையும் அல்ல: கஞ்சத்தன்மையும் அல்ல.. எளிமை என்பது சாதாரண தன்மையிலும் தேஜோமயமாக விளங்குவது. எளிமை தன்மைக்குள் சிக்கனமும் இருக்கும் சேமிப்பும் இருக்கும். எளிமை என்பது ஆடம்பரமற்ற உயர்ந்த அந்தஸ்து. எளிமை ஏளனம் அல்ல அது உயர்ந்த கோபுரம்.அது பட்டை தீட்டப்பட்ட பிரகாசிக்கும் வைரம்.

3) எல்லோராலும் எளிமையாக இருந்துவிட முடியாது. அனுபவஸ்தர்கள் மட்டுமே எளிமையாக இருப்பார்கள். வாழ்க்கையின் ஆரம்ப பாடமும் எளிமை இறுதி பாடமும் எளிமை என்பதை அனுபவஸ்தர்கள் மட்டுமே புரிந்து இருப்பார்கள். அதனால் அமைதியாக எளிமையாக இருப்பவரிடம் ஏகப்பட்ட ரகசியங்கள் அடங்கியிருக்கும். அவர்கள் இவ்வுலகில் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாதவர்களாக இருப்பார்கள்.

4) எளிமையில் சாதாரணம் இருக்கும். சாதாரணத்தில் அசாதாரணம் இருக்கும். எளிமையின் வேர்கள் எஃகு போன்றது. எளிமையில் அன்பு வெளிப்படும். எளிமையாக இருப்பது வேறு: எளிமையாககாட்டிக்கொள்வது வேறு. எளிமையாக காட்டிக் கொள்பவர்கள் எல்லாம் எளிமையானவர்கள் அல்ல. உண்மையான எளிமையானவர்களை எளிதில் அடையாளம் கண்டு கொள்ளலாம். அவர்களது பேச்சில் பணிவு இருக்கும் செயலில் நிதானம் இருக்கும். எதிலும் அவரிடம் சுயநலம் இருக்காது.

5) எளிமை நிறைந்தவர்கள் மகான்கள் ஆவார்கள். உண்மையான எளிமை உடையவர்கள் பிறரின் மனதின் அன்பிற்கு பாத்திரமானவர்கள். எளிமை அனைவருக்கும் இருப்பதை பகிர்ந்தளிக்கும். எளிமையான ஒருவர் எல்லோரும் தன்னுடையவர்கள் என நினைப்பார்கள். எளிமையானவர்கள் எல்லோரிடமும் இருந்தாலும் தனித்தன்மை நிறைந்து விளங்குவார்கள். எளிமையில் தெய்வீகம் வெளிப்படும்.

6) எளிமை என்பது உரக்கப் பேசாதது. பிறர் மனம் புண்பட பேசாதது எளிமை. எளிமை இருக்குமிடத்தில் கடின வார்த்தைகள் வெளிப்படாது. எளிமை சாந்தத்தை பிறருக்கு போதிக்கும். எளிமை என்ற குணம் யாவரையும் கை வணங்கச் செய்யும். எளிமையானவர்கள் எப்பொழுதும் இனிமையானவர்கள். கோபம் இல்லாத இடமே எளிமை நிறைந்த இடம். பொறாமை இல்லாத இடமே எளிமை நிறைந்த இடம். ஆணவம் இல்லாத இடத்தில் எளிமை வீற்றிருக்கும்.

7) எளிமை தந்தை ஈசன் வீற்றிருக்கும் இடமாகும். தந்தை ஈசன் எளிமையானவர் என்பதற்காக அவருக்கு எளிமையான ஆடைகளே அணிவிக்கப்படுகின்றது .இதன் காரணமாக அவரது அடியார்களும் மிக எளிமையான ஆடைகளையே அணிகின்றனர். திருநீறு அணிவது கூட எளிமையின் அடையாளம் ஆகும். மூன்று பட்டைகளின் அடையாளம் கூட எளிமையாக இரு, அன்பாக இரு, அமைதியாக இரு என்பதாகும். ஏனெனில் இவ்வுலகில் எல்லாமே ஒரு நாள் சாம்பலாக கூடியது என்பதாக பொருள்படும். எளிமையில் தான் ஆன்ம நிலை வெளிப்படும். எளிமையான ஒருவர் முகத்தில் ஆன்ம

ஜோதி பிரகாசிக்கும். எல்லாம் இருந்தும் எதுவுமில்லை என்பவரே எளிமையானவர் தெளிவானவர்.

8) எளிமைக்கு உதாரணமாக உலகில் நிறைய மகான்கள் வாழ்ந்து சென்றுள்ளனர். வாழ்வில் உயர நினைப்பவர் எளிமையுடன் சத்தியம் என்ற உயர்ந்த பண்பையும் கற்றுக்கொள்ள வேண்டும். எளிமை நிறைந்தவரிடம் அனைவரும் அருகில் சென்று பழகுவர். எளிமை பேசாமல் பிறருக்கு கற்றுக் கொடுக்கும் மந்திரச்சாவி ஆகும். எளிமை நிறைந்த முகத்தில் மலர்போன்ற புன்னகை நிறைந்திருக்கும்.எளிமை நிறைந்திருப்பதால் கவலையற்ற தன்மை இருக்கும்.வறுமையால் எளிமை அல்ல, தம்மிடம் எவை இருந்தாலும் அவை அனைத்தும் தந்தை ஈசனுடையது என்பதே எளிமை. வாழ்வை உணர்ந்தவர் எளிமையாக இருப்பார். அதை உணராதவரோ ஆடம்பரம் செய்வார். சிக்கனம் சேமிப்பு தயாளம் நன்னடத்தை இவை எல்லாம் எளிமையில் அடங்கியிருக்கும்.

9) எளிமை நிறைந்தவர் தானாகவே உயர்ந்த நிலை அடைவார். எளிமை வேஷம் அல்ல விவேகம். யாருக்கும் தீமை செய்யாமல், தீமை நினையாமல், தானும் எவ்விதத் துன்பமும் இன்றி பிறருக்கும் எவ்வித துன்பத்தையும் கொடுக்காமல் அமைதியாக வாழ்வதே எளிமை. யாரையும் ஏளனம் செய்யாததே எளிமை. ஏளனமாக இருப்பவர்களையும் ஏற்றம் செய்வதுதான் உண்மையான எளிமை.

10) எளிமையானவருடைய பார்வையில் வெறுப்பு இருக்காது. அந்தப் பார்வையில் கருணை நிறைந்திருக்கும் .எளிமையானவர் எல்லோரையும் தனதானவராக நினைப்பார். எளிமை என்பது மனித வாழ்வின் கிரீடத்தில் உயர் ரத்தினம் ஆகும். அந்த எளிமை நிறைந்த ரத்தினமானது உலகம் முழுவதும் ஒளி வீசி பிரகாசிக்கும்.எளிமை என்பது கோவிலில் குடியிருக்கும் தெய்வத்தின் தோற்றத்தை கொண்டவராக ஒருவரை மாற்றிவிடும். உலகில் ஏமாற்றுவதற்காக நிறைய மனிதர்கள் எளிமை வேஷம் போடுகின்றார்கள். ஆனால் உண்மையான மனிதனோ அதை வேஷம் என்பதை கண்டுபிடித்து விடுவான். எனவே, சத்தியமாக இருங்கள். எளிமையாக இருங்கள், அன்பாக இருங்கள். அஹிம்சை நிறைந்தவராக இருங்கள். அப்பொழுது உயர்ந்த மனிதராக உலகில் நீங்களும் ஒளி வீசும் நட்சத்திரம் ஆவீர்கள்.



## உலகப்புகழ்பெற்ற #டிசைனர்

**உலகப்புகழ்பெற்ற #டிசைனர். சமீபத்தில் கேன்சரால் இறந்து போனார். அவர் கடைசியாக எழுதிய வார்த்தைகள்..**

- மரணத்தை_விட_உண்மையானது இந்த உலகத்தில் எதுவுமே இல்லை.
- இந்த உலகத்தில் விலை உயர்ந்த #பிராண்டட்(Branded) கார் என்னுடைய கேரேஜில் (Garage) நிற்கிறது. ஆனால் நான் #சக்கர நாற்காலியில் அழைத்து செல்லப் படுகிறேன்.!
- இந்த உலகத்தில் உள்ள அனைத்து வகையான டிசைன்களிலும் கலர்களிலும் விலை உயர்ந்த ஆடைகள், விலை உயர்ந்த காலணிகள், விலை உயர்ந்த பொருட்கள் அனைத்தும் என் வீட்டில் உள்ளது. ஆனால் நான் மருத்துவமனை வழங்கிய #சிறிய_கவுனில் இருக்கிறேன்.!
- என் வங்கி கணக்கில் ஏராளமான பணம் கிடக்கிறது ஆனால் எதுவும் எனக்குப் பயன் இல்லையே.!!
- என் வீடு அரண்மனை போன்று கோட்டை போன்று உள்ளது ஆனால் நான் மருத்துவமனையில் ஒரு சிறு #படுக்கையில் கிடக்கிறேன்.
- இந்த உலகத்தில் உள்ள ஐந்து #நட்சத்திர ஹோட்டல்களுக்கு நான் பயணித்துக் கொண்டே இருந்தேன். ஆனால் மருத்துவமனையில் உள்ள #ஆய்வகங்களுக்கு மற்றொரு லேபிற்க்கும் (Lab) மாற்றி மாற்றி அழைத்துச் செல்லப்படுகிறேன்.!
- நான் தினசரி லட்சக்கணக்கானவர்களுக்கு ஆட்டோகிராப் (Autograph) போட்டுக் கொண்டிருந்தேன் . ஆனால் இன்று மருத்துவர்களின் பரிந்துரை தான் எனது #ஆட்டோகிராப். !
- அன்று தினசரி 7 சிகை அலங்கார நிபுணர்கள் எனக்கு அலங்காரம் செய்வார்கள். ஆனால் இன்று என் #தலையில்_முடியே இல்லை .
- உலகிலுள்ள பல வகையான உயர் நட்சத்திர ஓட்டல்கள் உணவுகளை உண்டு கொண்டிருந்தேன். ஆனால் இன்று பகலில் இரண்டு மாத்திரைகள்: இரவில் ஒரு துளி உப்பு !
- தனியார் ஜெட்டில் உலகம் முழுவதும் பறந்து கொண்டிருந்தேன். ஆனால் இன்று மருத்துவமனை வராந்தாவிற்கு வருவதற்கு இரண்டு_நபர்கள் உதவுகிறார்கள்.?

**எல்லா வசதி வாய்ப்புகளும் எனக்கு உதவவில்லை. எந்த விதத்திலும் ஆறுதல் தரவில்லை ! ஆனால் சில #அன்பானவர்களின் #முகங்களும் அவர்களது #தொழுதல்களும் என்னை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது.**

## காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் 37 பதிவேடுகள்

1. பொது நாட்குறிப்பு
2. முதல் தகவல் அறிக்கை தொகுப்பு
3. பாகம் - 1 நிலைய குற்ற வரலாறு
4. பாகம் - 2 குற்ற வரைபடம்
5. பாகம் - 3 தண்டனை பதிவேடு
6. பாகம் - 4 கிராம சரித்திர பதிவேடு காவல் நிலை ஆணை 756 படிவம் - 110
7. பாகம் - 5 கெட்ட நடத்தைகாரர்களின் சரித்திரப் பதிவேடு
8. கெட்ட நடத்தைகாரர்களின் தணிக்கை பதிவேடு
9. பெயர் வரிசைப் பதிவேடு
10. குற்ற செய்முறை தனித்தாள் தொகுப்பு
11. முன் தண்டனை குற்றவாளிகள் பதிவேடு
12. விசாரணை படிவம் "அ"
13. விசாரணை படிவம் "ஆ"
14. குற்றத் தொகுப்பு
15. கைது அட்டை
16. கைதி பரிசோதனை பதிவேடு
17. பிணைப் பத்திரம்
18. கட்டளைப் பதிவேடு
19. கைவிரல் ரேகை பதிவுத்தாள்
20. சிறுவழக்கு பதிவேடு
21. சமுதாய பணிப் பதிவேடு
22. மருத்துவமனை குறிப்பாணை
23. போக்கிரி பதிவேடு
24. காவல்முறை மாற்றுப் புத்தகம்
25. அலுவல் பதிவேடு
26. மிகைநேர அலுவல் படிப் பதிவேடு
27. நோட்டுப் புத்தகம்
28. பணப் பதிவேடு காவல் நிலை ஆணை 262
29. அஞ்சல் அனுப்புகை பதிவேடு
30. நடப்புத் தாள் பதிவேடு
31. ஆயுத வழக்கு பதிவேடு
32. துப்பாக்கி உரிமப் பதிவேடு
33. ஆயுத வைப்புப் பதிவேடு காவல் நிலை ஆணை 332 படிவ எண் - 47

34 - கிராமப் பதிவேடு

35 - அரசு சொத்துப் பதிவேடு

36. காலமுறை தொகுப்புகள்
37. உயர் அலுவலர்கள் பார்வை பதிவேடு

## இ.எஸ்.ஐயை ஒழித்துக் கட்ட மத்திய அரசு திட்டம்!

***‘இந்த இ.எஸ்.ஐ எல்லாம் இனி தேவையில்லை. தொழிலாளர்கள் எல்லாம் தனியார் மருத்துவமனைக்கு போகட்டும்’ என்ற நோக்கத்தில் ஒன்றிய அரசு சமூகப் பாதுகாப்புச் சட்டத் தொகுப்பு கொண்டு வந்துள்ளது. அதை எதிர்த்து சட்ட போராட்டம் நடத்தும் வழக்கறிஞர் ஆர். நடராஜன் நேர்காணல்.***

தமிழகத்தில் மட்டுமே 18,000 க்கு அதிகமான தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள் இ.எஸ்.ஐயில் இணைந்து பலன் பெற்று வருகின்றனர். இந்தியா முழுமையிலும் லட்சத்திற்கு மேற்பட்ட தொழிற்சாலைகள், கோடிக்கணக்கான தொழிலாளர்கள் இ.எஸ்.ஐ மருத்துவப் பலன்களை பெற்று வருகின்றனர்.

”பாஜக அரசு கொண்டு வந்துள்ள Code on Social Security, 2020 என்ற புதிய சட்டமானது, தொழிலாளர்கள் தற்போது அனுபவித்து வரும் பலன்களை தடுக்கும்; தனியார் காப்பீடு நிறுவனங்களை ஊக்குவிக்கும். பாராளுமன்ற நெறிமுறைகளுக்கு விரோதமாக இந்த சட்டத் தொகுப்பு கொண்டுவரப் பட்டுள்ளது” என்று கூறும் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் **ஆர். நடராஜனை** நேர்காணல் செய்கிறார் பீட்டர் துரைராஜ்.

**இந்த புதிய சட்டத்தின் நோக்கம் என்ன?**

மருத்துவத்திற்காக செலவழிக்கும் தொகை ஒருவரது வருமானத்தில் பெரும்பகுதியை எடுத்துக் கொள்கிறது. எனவே தான், மருத்துவ வசதியானது, சமூகத்தின் பொறுப்பாக கருதப்படுகிறது. ஆனால், நமது மத்திய ஆட்சியாளர்கள் இதை விரும்பவில்லை. இஎஸ்ஐ - ல் சேருபவர்களின் எண்ணிக்கையையும், இதன் கீழ் வழங்கப்படும் பலன்களையும் குறைக்க அரசு எண்ணுகிறது. இதனால் தொழிலாளர்கள் தனியார் காப்பீடு திட்டத்தை நோக்கி நகர்வார்கள். தனியார் காப்பீடு நிறுவன வியாபாரம் நன்றாக செழிக்கும்.

**சமூகப் பாதுகாப்பு என்பது என்ன ?**

மருத்துவ வசதி, முதியோர் பராமரிப்பு, வேலையில்லாக் காலத்தில் உதவி, மகப்பேறு உதவி, இறந்து விட்டால் உதவி போன்றவை சமூகப் பாதுகாப்பில் வரும். ஒரு தொழிலாளி இறந்து விட்டால், அவர் வாங்கிய சம்பளத்தில் 90 சதவீதம் உதவித் தொகையாக குடும்பதினருக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதுவே சமூகப் பாதுகாப்பாகும். இது அரசியல் சட்டத்தின் 21 மற்றும் 41 வது பிரிவுகளின்படி மக்களின் உரிமையாகவும், அரசின் கடமையாகவும் ஆக்கப்பட்டுள்ளது. சமூகப் பாதுகாப்பு என்பது ஒருவருக்குக் காட்டப்படும் கருணை அல்ல; தொழிலாளியின், அவரது குடும்பத்தினரின் உரிமையாகும். விவசாயத் தொழிலாளர்களையோ, கட்டடத் தொழிலாளர்களையோ, தொழிலாளர் ஈட்டுறுதிச் சட்டத்திலோ, வருங்கால வைப்புநிதியிலோ சேர்க்க சட்டப்படியான தடை ஏதுமில்லை.

**‘சமூகப் பாதுகாப்பு சட்டத் தொகுப்பு -2020’ குறித்து என்ன நினைக்கிறீர்கள் ?**


அரசியல் அமைப்புச் சட்டம் உருவாவதற்கு முன்பே 1948 ஆம் ஆண்டில் தொழிலாளர் ஈட்டுறுதிச் சட்டம் (இஎஸ்ஐ), குறைந்த பட்ச ஊதியச் சட்டம் மற்றும் தொழிற்சாலைகள் சட்டம் ஆகிய மூன்றும் உருவாக்கப்பட்டன. பணிக்கொடைச் சட்டம் 1972 ஆம் ஆண்டு வந்தது. இதுபோன்ற ஒன்பது சட்டங்களை உள்ளடக்கித்தான் ஒன்றிய அரசு, 2020 ல் சமூகப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

ஒரு தொழிலாளிக்கு உடல் நலம் இல்லையென்றால் அந்தக் காலத்திற்கு, அவர் வாங்கும் சம்பளத்தில் 70% இழப்பீடு வழங்கப்படுகிறது. மகப்பேறு காலத்தில் 100 % சம்பளத்திற்கிணையாக உதவித்தொகை வழங்கப்படுகிறது. இதில் சம்பளம் என்ற

வரையறையில், அடிப்படை சம்பளம்,போக்குவரத்துப்படி, உணவுப் படி, அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, ஊக்கத்தொகை என எந்தப் பெயரில் வழங்கினாலும் அடங்கும். எனவே ரூ.20,000 சம்பளம் வாங்கும் ஒரு தொழிலாளிக்கு 100 சத இழப்பீடு என்றால் வாங்கிய சம்பளம் அப்படியே கிடைக்கும். ஆனால், புதிய சட்டத்தில் அந்தத் தொழிலுக்கு உரிய குறைந்தபட்ச சம்பள அடிப்படையில்தான் இழப்பீடு வழங்கப்படும். மற்ற இனங்களில் வழங்கப்படும் படிகள் சேராது. அதாவது கணக்கிடும் முறையே புதிய சட்டத்தில் மாற்றப்பட்டுள்ளது. இதனால் தொழிலாளர்கள் பெறக் கூடிய தொகை பாதிக்கு மேல் குறையும்.

தொழிலாளர் ஈட்டுறுதிச் சட்டம் கொண்டுவரப் பட்டபோது, 400 ரூபாய் வரை சம்பளம் வாங்கும் அனைத்து தொழிலாளர்களும், பலன் பெறும் வகையில், இருந்தது. பிறகு 1975 ஆம் ஆண்டு, ரூ.1000 வரை சம்பளம் வாங்கும் தொழிலாளர்களுக்கு இந்த திட்டம் பொருந்தும் எனவும், 1984 ஆம் ஆண்டு மாதம் ரூ.1600 வரை சம்பளம் வாங்கும் தொழிலாளர்களுக்கு பொருந்தும் எனவும் இருக்கிறது. தற்போது ரூ. 21000 வரை ஊதியம் வாங்கும் தொழிலாளர்களுக்கு இ.எஸ். ஐ . உள்ளது. புதிய சட்டத்திற்கான விதிகளில் இந்த விவரம் இன்னும் வரவில்லை. இதில் என்ன கோளாறு செய்யப் போகிறார்களோ! தொழிலாளர் ஈட்டுறுதி நிறுவனத்திற்கு அரசு ஓர் அறங்காவலர் ஆகும். 8 கி.மீ தூரத்திற்கு ஒரு மருத்துவமனை, 1000 தொழிலாளர்கள் இருந்தால் அதற்கு ஒரு மருந்தகம் என்று



***வழக்கறிஞர் ஆர். நடராஜன்***

இந்த திட்டம் வளர்ந்து வருகிறது. மருந்தகங்களுக்கு ஆகும் செலவுக்கு இஎஸ்ஐ முன்பணம் கொடுத்து, மாநில அரசு மூலமாக, நடத்துகிறது.

**சட்டம் இயற்றும் முறைமைகளுக்கு விரோதமாக, இந்த சட்டத்தை ஒன்றிய அரசு பாராளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது என்று கருத்தரங்கில் கூறினீர்களே ?**

நாடெங்கிலும் தொழிலாளர்களுக்கான மருத்துவக் கல்லூரிகளை, இஎஸ்ஐ நிறுவனம் நடத்தி வருகிறது. இந்த கல்லூரிகளை நடத்த வேண்டாம் என்று 2015 ஆம் ஆண்டில் முடிவெடுத்தனர். கடும் எதிர்ப்புக்கு பிறகு நடத்தலாம் என்று முடிவெடுத்தனர். இந்தக் கல்லூரிகளை இஎஸ்ஐ நிறுவனமோ, மத்திய அரசோ, மாநில அரசோ, அல்லது வேறு நபர்களோ நடத்தலாம் என சட்டத்தில் மாற்றியுள்ளனர். 'வேறு நபர்கள்' என்றால், யார் என்ற கேள்வி எழுகிறது. ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியும் இருநூறு கோடிகளுக்கும் அதிகமான செலவில் கட்டப்பட்டவை. இவை தொழிலாளர்களும், அவர்களால் பலன் பெற்ற முதலாளிகளும் கொடுத்த பணத்தில் கட்டப்பட்டவை. இந்தச் சொத்துக்கள் தொழிலாளர்களுக்கு மட்டுமே சொந்தமானவை. இத்தகைய சொத்துகளை கபளீகரம் செய்யும் எண்ணம் தனியாருக்கு உள்ளது. அதற்கு துணை போகும் எண்ணம் இந்த ஆட்சியாளார்களுக்கு உள்ளது!

'தனியாருக்கு மருத்துவக் கல்லூரிகளை கொடுத்து நடத்தச் செய்யலாம்' என்ற திருத்தத்தை 17- செப்டம்பர் 2019 வரைவில்தான் முதலில் கொண்டு வந்தார்கள். யாருடைய அறிவுரையின் பேரில் இதை செய்கிறார்கள்? தமிழ்நாட்டில் டான்சி நிலத்தை, எடுத்துக் கொள்ள, என்ன விதமான வேலைகளில் ஈடுபட்டார்கள்? அதன் மதிப்பீட்டை எப்படி குறைத்து மதிப்பிட்டார்கள் என்பதை உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் பார்க்கலாம். அதேபோன்ற செயல்களை இஎஸ்ஐ மருத்துவக் கல்லூரிகளை தனியாருக்கு கொடுக்கும் போது செய்ய வாய்ப்புள்ளது.

மாநில அரசுக்கும், இ.எஸ். ஐ. நிறுவனத்துக்கும் பிணக்கு வந்தால், மத்தியஸ்தம் செய்பவராக (Arbitrator) நீதிபதிகளை, நியமிக்கலாம் என்று பாராளுமன்றத்தில் வைக்கப்பட்ட முன்மொழிவில் முதலில் இருந்தது. இதனை பாராளுமன்ற நிலைக்குழு ஆட்சேபிக்கவில்லை. ஆனால், பாராளுமன்றத்தில் புதிதாக 22-செப்டம்பர் 2020 அன்று நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் மேற்படி மத்தியஸ்தம் செய்பவர் ஒன்றிய அரசு நியமிக்கும் ஒருவர் என மாற்றப்பட்டுள்ளது. இத்தகைய மாற்றங்கள் மிக ஆபத்தான உள் நோக்கம் கொண்டது.

ஒரு சட்டம் புதிதாக அறிமுகப்படுத்தும் போது ஏற்கனவே இருந்த சட்டம் என்ன ? இப்போது அதனை எப்படி மாற்றப் போகிறார்கள். பாராளுமன்ற நிலைக்குழு கொடுத்த பரிந்துரைகளை ஏற்றுக் கொள்கிறோமா ! அதில் எங்கு மாறுபடுகிறோம் என்ற விபரங்களைக் கொடுப்பார்கள். அப்படி எதுவும் இதில் கொடுக்கவில்லை. புதிய சட்டத்தை மட்டும் கொடுத்து, சட்டமாக்கி யுள்ளனர். இது பாராளுமன்ற நடைமுறைகளுக்கு ( Manual of Parliamentary Procedure) எதிரானது. இது ஒரு நாணயமற்ற செயல். விவாதமே இல்லாமல் பாராளுமன்றத்தில் தொழிலாளர் சட்டங்களை நிறைவேற்றியுள்ளனர்.

இதனை எதிர்த்து ஐஎன்டியுசி சார்பாக ஆதிகேசவலு, ஏஐடியுசி சார்பாக டி.எம்.மூர்த்தி, கோபால்சாமி என்ற இஎஸ்ஐ சந்தாதாரர் ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். இஎஸ்ஐ இல்லாத தொழிலாளர்களுக்கு, பேறுகால நலப்பயன் சட்டம் பொருந்தும். இதிலும் சம்பள வரையறை மாற்றப்பட்டுள்ளதால் பயனாளர்களுக்கு வழங்கப்படும் தொகை குறையும். இதனால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதகங்களை விளக்கி வகிதா நிஜாம், உழைக்கும் பெண்கள் சார்பாக, உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். அனைத்து விதமான தொழிலாளர் சட்டங்களுக்கும், ஒரே விதமான சம்பள வரையறை தவறு.

**உலகின் மற்ற நாடுகளில் சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் எப்படி உள்ளன?**

பதில்: இங்கிலாந்துப் பிரதமர் கொரானாவால் பாதிக்கப்பட்ட போது அங்கிருந்த தேசிய சுகாதார காப்பீட்டு மருத்துவமனையில்தான் (இங்குள்ள இஎஸ்ஐ மருத்துவமனை போல) சிகிச்சை எடுத்தார். அங்கு எல்லா நோயாளிக்கும் ஒரே விதமான சிகிச்சைதான். நார்வே, ஸ்வீடன், பின்லாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில் தொழிலாளர்களிடமிருந்து கணிசமான பங்களிப்பு தொகை பெறப்படுகிறது. கல்வி, மருத்துவம், ஓய்வூதியம் போன்ற சகலவிதமான வசதிகளும் அனைவருக்கும் கிடைக்கின்றன.தாய்லாந்தில் ஆட்டோ தொழிலாளர்கள் மாதந்தோறும் ஐந்தாம் தேதிக்குள் தங்கள் பங்களிப்பை மருத்துவ ஈட்டுறுதிக்குச் செலுத்தினால், அதற்கு ஈடான தொகையை வேலையளிப்பவர் சார்பாக அரசாங்கமே செலுத்திவிடுகிறது.

பாதுகாப்பை தனியார் வசமாக்கினார்கள்; இதனால் அந்த திட்டம் தோல்வி அடைந்தது. இது ஒரு தவறான முன்மாதிரி ஆகும். வேலையாள் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் மரணமடைந்த, காயமுற்ற, அல்லது செயலிழந்த தொழிலாளர்களுக்கு இழப்பீடு தருவது வேலை அளிப்பவரின் பொறுப்பாகும். தனியார் காப்பீடு வசம் இத்தகைய திட்டங்கள் சென்றால், பலன்களை குறைக்கும் வகையில் தந்திரமாக சில கட்டுப்பாடுகளைப் போடுவார்கள். முடிந்த அளவு உதவாமல் தவிர்க்க பார்ப்பார்கள்.

புதிய சட்டங்களை உருவாக்கும்போது, ஏற்கனவே இருக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை மேம்படுத்துவதும், விரிவு அவசியமாகும். அதனால்தான் பாராளுமன்ற நிலைக்குழு, 'இப்போது தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் எந்தச் சலுகையையும் குறைக்கக் கூடாது' என்று பரிந்துரைத்து இருந்தது. ஆனால் ஒன்றிய அரசு இப்போது கொண்டுவந்திருக்க புதிய சட்டத்தில் ஏற்கனவே வழங்கப்படும் சலுகைகளைப் பறிக்கின்ற வகையில் சட்டம் இயற்றியுள்ளது. இவர்களுக்கு தொழிலாளர்கள் என்றாலே எட்டிக்காயாக கசக்கிறது!

***-பீட்டர் துரைராஜ் (அறம்,***January 22, 2022)

---

## பெருந்தலைவர் காமராஜர் - வைகை அணை

*பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக்காலத்தில் மதுரை திண்டுக்கல் பகுதி விவசாயத்தை செழிப்படைய வைக்க வேண்டுமென்றால் தேனி ஆண்டிப்பட்டி பகுதியில் உடனடியாக அணை கட்டியே தீர வேண்டும் என்ற சிந்தனை பெருந்தலைவர் காமராஜருக்கு உருவாகிறது.*

*இதற்காக இன்ஜினியர் தாமஸ் என்பவரிடம் ஆலோசனை கேட்க, இன்ஜினியரோ இந்த இடத்தில் அணைகட்ட சாத்தியமில்லை என்று பதிலளிக்கிறார்.* *ஆனால் பெருந்தலைவர் காமராஜர் ஒரே முடிவாக அணை கட்டியே தீர வேண்டும், என்ன நடந்தாலும் பார்த்துக்கொள்ளலாம் உடனடியாக இதற்கான செயல்வடிவம் கொடுங்கள் என்று கட்டளையிடுகிறார்.*

*பின்னர் அணை கட்டுவதற்கான நிதியாக 2.75 கோடி தொகை நிர்ணயிக்கப்பட்டு இன்ஜினியர் தாமஸ் அவர்களிடம் முழு பொறுப்பும் ஒப்படைக்கப்படுகிறது.* *தொடர்ந்து பணிகள் நடைபெற்று அணை முழுமையாக கட்டிமுடிக்கப்படுகிறது.*. *அணை கட்டிய மொத்த செலவு 2 கோடி ரூபாய்.மீதமுள்ள 75 லட்சத்தை அரசாங்கத்திடமே ஒப்படைக்கிறார் இன்ஜினியர்.*

*ஆனால் பெருந்தலைவர் காமராஜர் மீதமுள்ள அந்த நிதியை வாங்காமல் அதை வைத்து அணைக்கு இருபுறமும் பூங்காக்கள் அமைத்தும், சிறுவர்கள் விளையாட்டுத்திடல் அமைத்தும் சுற்றுலாத்தளமாக உருவாக்கிவிட்டால் அதில் இருந்து கிடைக்கும் வருமானத்தை வைத்தே காலம் முழுதும் அணை பராமரிப்பு செலவிற்கு பயன்படுத்தி கொள்ளலாம் என்று ஆலோசனை கூறுகிறார்.*

*பெருந்தலைவரின் இந்த தொலைநோக்கு சிந்தனைகளை கண்டு ஆடித்தான் போயிருப்பார் அந்த இன்ஜினியர்.*

*பின்னர் வைகை அணையை சுற்றிலும் பிரம்மாண்டமாக பூங்காக்கள் அமைத்து அதிக அளவில் சுற்றுலாப்பயணிகள் வந்து செல்வதற்கு வசதியாக உருவாக்கப்படுகிறது.* *63 ஆண்டுகள் கடந்தும் வைகை அணை கம்பீரமாக காட்சியளித்து இன்றும் மதுரை, தேனி, திண்டுக்கல் போன்ற மாவட்டங்களின் விவசாயத்தை பசுமையாக்கி கொண்டிருப்பதை பார்க்கும் போது பெருந்தலைவர் காமராஜரை ஒரு நொடியேனும் நினைக்காமல் கடந்து செல்ல முடியவில்லை.*

*பெருந்தலைவரின் 9வருட பொற்கால ஆட்சியில் உருவான பலநூறு சரித்திர திட்டங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றான வைகை அணை 1959ம் ஆண்டு ஜனவரி 29ல் மக்கள் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டு இன்றோடு 63வருடங்கள் நிறைவடைந்து 64ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.*

***வைகை அணை தந்த வைரம் பெருந்தலைவர் காமராஜரின் புகழை என்றும் போற்றுவோம்!❤*︎**

## மக்கள் வரிப்பணத்தில் இலவசங்களை அறிவிக்கும் அரசியல் கட்சிகள்

**வழக்குரைஞர் அஸ்வினி குமார் உபாத்யாயா** "மக்கள் வரிப்பணத்தில் இருந்து இலவசங்களை அறிவிக்கும் அரசியல் கட்சிகளின் பதிவை ரத்து செய்வதற்கு, தேர்தல் ஆணையத்திற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்" என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவில் கூறியிருப்பதாவது:

தேர்தல் வரும்போது வாக்காளர்களை கவரும் எண்ணத்தில் அரசியல் கட்சிகள் இலவசங்களை அறிவிக்கும் நடைமுறை இருந்து வருகிறது. இது ஜனநாயக மதிப்பீடுகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருப்பதோடு, அரசியல் சாசன நடைமுறைகளையும் கடுமையாக பாதிக்கிறது. இந்த நடைமுறை அரசியல் கட்சிகள் ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுப்பது போன்ற செயலாகும். ஜனநாயக நடைமுறைகளை பாதுகாக்க இதுபோன்ற நடைமுறைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

இதற்காக, தேர்தலுக்கு முன்பாக அரசியல் கட்சிகள் இலவசங்களை அறிவிப்பதை தடை செய்யும் கட்டுப்பாடுகளை, மாநில கட்சியாக அங்கீகாரம் அளிப்பதற்கான தேர்தல் சின்ன ஒதுக்கீடு உத்தரவு 1968-ல் தேர்தல் ஆணையம் சேர்க்க உத்தரவிட வேண்டும்.

தேர்தலுக்கு முன் பொது நிதியில் இருந்து இலவசங்களை அரசியல் கட்சிகள் அறிவிப்பது வாக்காளர்களின் சமநிலையை பாதிக்கிறது. தேர்தல் நடைமுறையின் தூய்மையை கெடுக்கிறது. அரசியலமைப்புச் சட்ட பிரிவு 14, 162, 266(3) ஆகியவற்றை இந்த நடைமுறை மீறுகிறது என நீதிமன்றம் அறிவிக்க வேண்டும்.

நடைபெறவுள்ள 5 மாநிலங்களுக்கான தேர்தலில் ஒரு கட்சி அனைத்து பெண்களுக்கும் மாதம் ரூ.1000 வழங்குவோம் என அறிவிக்கிறது, மற்றொரு கட்சி இலவச சமையல் எரிவாயு சிலிண்டர்களை அறிவிக்கிறது.

பஞ்சாப் மாநில சட்டமன்ற தேர்தலுக்காக ஏகப்பட்ட இலவச வாக்குறுதிகள் அளிக்கப்படுகின்றன. பஞ்சாப் அரசால் ஊழியர்களுக்கு சம்பளம், ஓய்வூதியம் கூட வழங்க முடியவில்லை. ஏற்கனவே அம்மாநிலத்திற்கு ரூ.77,000 கோடி கடன் இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் கடன் மேலும் அதிகரிக்கிறது. இதில் இலவசங்களை எப்படி தர முடியும். இவ்வாறு அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.



சேலத்தில் பரபரப்பு சம்பவம்

### போலீஸ் சுற்றி வளைத்ததும் லஞ்ச பணத்தை வாயில் போட்டு மென்று விழுங்கிய வி.ஏ.ஓ.,

• மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று பறிமுதல்
• சஸ்பெண்ட் செய்யப்பட்டார்

சேலம், பிப்.5: சேலத்தில் வாரிசு சான்றிதழ் வழங்க லஞ்சமாக வாங்கிய ₹4,500 பணத்தை கிராம நிர்வாக அலுவலர் வாயில் போட்டு விழுங்கிய தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சேலம் அழகாபுரம் பகுதியை சேர்ந்தவர் மாதேஷ்வரி. இவரது தந்தை கைலாசநாயுடு இறந்து போனார். இதனால், வாரிசு சான்றிதழ் பெறுவதற்கு வாழப்பாடியில் வசித்து வரும் தங்கை மகன் தினேஷ்குமார் உதவியை நாடினார். எம்பிஏ பட்டதாரியான அவர், இ-சேவை மையத்தின் மூலம் சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்தார். பின்னர், அழகாபுரம் கிராம நிர்வாக அலுவலர் குமரேசனிடம் இ-சேவை மையத்தில் விண்ணப்பித்தது குறித்து தெரிவித்துள்ளார்.

அப்போது ₹5 ஆயிரம் கொடுத்தால் சான்றிதழ் தருவேன் என விஏஓ குமரேசன் கூறியுள்ளார். இறுதியாக ₹4,500 கேட்டுள்ளார். இதையடுத்து தினேஷ்குமார், சேலம் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசில் புகார் கொடுத்தார். கடந்த 2ம் தேதி, லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகளின் ஆலோசனைபடி, ரசாயனம் தடவிய ₹4500ஐ கொடுத்தபோது, லஞ்ச ஒழிப்பு போலீசார் அவரை கைது செய்ய சுற்றி வளைத்தனர். இதனால் சுதாரித்துக்கொண்ட குமரேசன், லஞ்ச பணத்தை திடீரென வாயில் போட்டு மென்று விழுங்கினார்.

ஆனால் அந்த பணம் அவரது தொண்டையில் சிக்கிக்கொண்டது. உடனே அவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று தொண்டையில் சிக்கிய பணத்தை வெளியே எடுத்துள்ளனர். இதனை வீடியோவாக லஞ்ச ஒழிப்புத் துறை போலீசார் பதிவு செய்துகொண்டுள்ளனர். பிறகு தான், விசாரணை நடத்தி அவரை சிறையில் அடைத்துள்ளனர். இந்த தகவல் வருவாய்த்துறை அலுவலர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனிடையே லஞ்ச வழக்கில் கைதான விஏஓ குமரேசன் மீது துறை ரீதியான நடவடிக்கையாக அவரை சஸ்பெண்ட் செய்துள்ளனர்.

#### ₹25 ஆயிரம் லஞ்சம் வாங்கிய தாசில்தார் கைது

கோவை பெரியநாயக்கன்பாளையம் பகுதியை அடுத்த நாயக்கன்பாளையத்தை சேர்ந்தவர் சின்னராஜ் (61). இவர் ஊராட்சி துணை தலைவராக இருக்கிறார். இவர் கோவை லஞ்ச ஒழிப்பு போலீசில் ஒரு புகார் மனு அளித்தார். இந்த மனுவில், "பெரியநாயக்கன்பாளையத்தில் உள்ள இந்திரா காந்தி வணிக வளாகத்தில் உள்ள கடைகளை ஏலம் விட அதிகாரிகள் முடிவு செய்தனர். இந்த ஏலத்தில் பங்கேற்க நான் முடிவு செய்தேன். இதையடுத்து ரூ.5 லட்சத்திற்கான கடனளிப்பு சான்றிதழ் வழங்கக்கோரி வருவாய் துறையிடம் விண்ணப்பித்தேன்.

இதையடுத்து நான் கோவை வடக்கு தாசில்தார் கோகிலாமணியை சந்தித்து சான்றிதழ் வழங்கும்படி கோரினேன். அப்போது, அவர் ரூ.35 ஆயிரம் லஞ்சம் வழங்கினால்தான் சான்றிதழ் அளிக்க முடியும் என கூறினார்.

எனவே, இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என கூறியிருந்தார். புகார் மனுவை பெற்றுக்கொண்ட லஞ்ச ஒழிப்பு போலீசார், சின்னராஜிடம் ரசாயனம் தடவிய ரூபாய் நோட்டுகளை வழங்கினர். இதையடுத்து சின்னராஜ் நேற்று காலை கோவை வடக்கு தாசில்தார் கோகிலாமணியை சந்தித்து ரூ.25 ஆயிரத்தை வழங்கினார்.

அப்போது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் கையும், களவுமாக தாசில்தார் கோகிலாமணியை பிடித்து கைது செய்தனர்.

தினகரன் Sat, 05 February 2022
https://epaper.dinakaran.com/c/66044533

TOI - 16 Jan 2021

# Sub-registrar suspended over graft

Times News Network

**Chennai:** The sub-registrar of Sriperumbudur SRO has been suspended on charges of demanding bribe.

An inquiry against S V Harinath is being contemplated, an order issued by the deputy general of registration on Thursday said, adding the sub-registrar has been placed under suspension with immediate effect.

Registration department sources said the suspension followed a complaint pertaining to registration of a property. While a bribe amount ranging from ₹1 to ₹12 lakh was sought to register the property, official sources said the registration was delayed under the garb of absence of necessary documents. However, all the required documents were furnished to the registration official by the persons concerned.

# Corruption has got into blood of government officials: Court

Sueshkumar.k
@timesgroup.com

**Chennai:** Corruption has penetrated into the blood of government officials, the Madras high court has said while upholding the dismissal of a woman who had submitted forged documents to get appointment on compassionate ground.

A division bench of Justice S Vaidyanathan and Justice A A Nakkiran made the observation while allowing an appeal moved by the Tamil Nadu government.

The issue pertains to a plea moved by M Tamilselvi challenging her termination from service on the ground of suppression of facts while obtaining appointment on compassionate ground.

Challenging the order, she moved the high court. Partly allowing the plea, a single judge of the court modified the dismissal order into compulsory retirement on November 6, 2020.

Aggrieved, the state has preferred the present appeal.

**The court made the observation while upholding the dismissal of a woman who had submitted forged documents to get appointment**



Allowing the appeal, the bench said: "The single judge clearly held that though the writ petitioner has committed fault, the officials of the department must have played some part in inducing her to commit wrong and therefore, the judge ought not to have converted the removal from service into one compulsory retirement."

Having completed more than 10 years of service, the government may have to extend the pensionary benefits to the person provided she had joined the services prior to introduction of new provident fund, and for the wrongdoer, there is no need for the government to extend the tax payers money by means of pensionary benefit, the judges said.

# அலற வைக்கும் ஆன்லைன் சூதாட்டம்!

**கடந்த வாரம் சென்னையில் நடந்த இரு குற்ற நிகழ்ச்சிகள், தமிழகம் முழுக்கவே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.**

**செய்தி-1:**

சென்னை பெருங்குடியிலுள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில், மனைவி மற்றும் மகன்களுடன் வசித்து வந்தார் தனியார் வங்கி அதிகாரியான மணிகண்டன். புத்தாண்டு தினத்தன்றும், மறு நாளும் அந்த வீடு திறக்கப்படாத தால், அக்கம்பக்கத்தினர் போலீ ஸாருக்கு தகவல் கொடுத்தனர். அங்கு வந்த போலீஸார் கதவை உடைத்து பார்த்தபோது, மணி கண்டன் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தார். அவரது மனைவி



குடும்பத்துடன் மணிகண்டன்

தாரா ரத்த வெள்ளத்திலும், 10 வயது மற்றும் 1 வயது ஆண் குழந்தைகள் கழுத்து நெறிக்கப் பட்டும் உயிரிழந்து கிடந்தனர்.

போலீஸ் விசாரணையில் மணிகண்டன் பங்குச்சந்தை மற்றும் ஆன்லைன் சூதாட்டத்தில் ஏகப் பட்ட பணத்தை இழந்ததாகத் தெரிய வந்தது. இதனால் நண்பர் கள், உறவினர்களிடம் ஏராளமான கடன் பெற்று இருக்கிறார். அதைத் திருப்பிச் செலுத்துவதில் சிரமம் ஏற்பட்டதால் கணவன், மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற் பட்டுள்ளது. 31-ஆம் தேதி இரவு தம்பதியிடையே தகராறு ஏற்பட்ட போது, ஆத்திரம் அடைந்த மணி கண்டன் கிரிக்கெட் மட்டையால் மனைவியை தாக்கியுள்ளார். இதில் தலை உடைந்து ரத்தப் போக்கு ஏற் பட்டு தாரா உயிரிழந்துள்ளார். இதையடுத்து பயந்து போன மணி கண்டன், குழந்தைகளை கழுத்தை நெரித்து கொலை செய்து விட்டு, தானும் தற்கொலை செய்து கொண் டுள்ளார்.

**செய்தி-2:**

சென்னை கடற்கரை- வேளச் சேரி மேம்பால ரயில் பாதை யிலுள்ள திருவான்மியூர் ரயில் நிலையத்தில், டிக்கெட் கவுண்டரில் கிளார்க்காக வேலை செய்து வந் தவர் ராஜஸ்தானைச் சேர்ந்த டீக்கா ராம். கடந்த ஜனவரி 3 -ஆம் தேதி அதிகாலை ரயில் நிலையத்திற்கு பயணிகள் வந்தபோது, டீக்காராம் கயிற்றால் கட்டப்பட்டு கிடந்தார். உடனே பயணிகள் போலீஸுக்கு தகவல் கொடுக்க, போலீஸார் விரைந்து வந்தனர்.

மூன்று பேர் துப்பாக்கி முனை யில் தன்னைக் கட்டிப்போட்டு விட்டு கவுண்டரில் இருந்த 1.32 லட்சம் ரூபாயை கொள்ளையடித்து விட்டுச் சென்றதாக புகார் அளித் தார் டீக்காராம். ரயில்வே நிலையத் தில் சி.சி.டி.வி. கேமரா எதுவும் இல்லாத நிலையில், சாலைகளில் இருந்த சி.சி.டி.வி. கேமராக்களை போலீஸார் ஆய்வு செய்தனர். அதில் டீக்காராம் குறிப்பிட்ட மாதிரி கொள்ளையர்கள் யாரும் வந்து போனது தெரியவில்லை. ஜீன்ஸ் அணிந்த ஒரு பெண் மட்டும் வந்து சென்றது தெரிய வந்தது.

மேலும் ஆய்வு செய்ததில் அந்தப் பெண் டீக்காராமின் மனைவி சரஸ்வதி என்பதும், டீக்காராமும், சரஸ்வதியும் திட்டமிட்டு ரயில்வே பணத்தை கொள்ளையடித்து விட்டு, பழியை மர்ம நபர்கள் மேல் போட்டதும் தெரிய வந்தது.

போலீஸாரின் விசாரணையில் டீக்காராம் ஆன்லைன் சூதாட்டத்தில் பல லட்ச ரூபாயை இழந்திருப் பதும், இதனால் நிறைய கடன் வாங்கி நெருக்கடியில் தவித்து வந்ததும் தெரிய வந்திருக்கிறது.

இந்த இரண்டு செய்திகளும், தமிழ்நாட்டில் ஆன்லைனில் சூதாட்டங்கள் எந்தளவுக்கு வேர் பிடித்து இருக்கின்றன என்பதை நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டு கின்றன. ஆன்லைன் சூதாட்டம் என்ற கேன்ஸர் கொஞ்சம் கொஞ்ச மாக தனி நபரை வீழ்த்தி, பின்னர் அது சமூகத்திற்கு எதிரான குற்றங் களாக எப்படி மாறுகின்றன என் பதற்கு, இந்த இரண்டு செய்திகளும் சமீபத்திய உதாரணங்கள்.

ஆன்லைன் சூதாட்டத்தில் இந்த உக்கிர தாண்டவத்தை உணர்ந்து தான், 2020 -ஆம் ஆண்டு அ.தி.



டீக்காராம் - சரஸ்வதி

மு.க. அரசு ஆன்லைன் சூதாட் டத்தை தடை செய்து ஒரு அவசர சட்டத்தைக் கொண்டு வந்து பின் னர், அதை சட்டசபையில் நிறை வேற்றியது. ஆனால் நீதிமன்றங்கள் அந்தச் சட்டத்தை செல்லாது என்று அறிவித்து விட்டன. இதனால் ஆன்லைன் சூதாட்டங்கள் மீண் டும் விஸ்வரூபம் எடுத்து விட்டன. இந்த சம்பவங்களையடுத்து ஆன் லைன் சூதாட்டங்களை ஒழிக்க வேண்டுமென்று எடப்பாடி பழனி சாமி, டாக்டர் ராமதாஸ் உள்ளிட்ட பல அரசியல் பிரமுகர்கள் கோரிக்கை விடுத்தனர். இதை யடுத்து 'விரைவில் ஆன்லைன் சூதாட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்' என்று சட்டசபை யில் தமிழக முதல்வர் அறிவித்துள் ளார்.

நடவடிக்கை வரட்டும். சூதாட்டம் ஒழியட்டும்!

**- எஸ்.ஜே.இதயா**

6 | துக்ளக் - 19.1.2022

கடனீட்டு சான்றிதழுக்கு

# ரூ.60 ஆயிரம் லஞ்சம் வாங்கிய தாசில்தார் கைது



▸ சிவகாமி

திருப்பூர், ஜன.28: கடனீட்டு சான்றிதழுக்கு ரூ.60 ஆயிரம் லஞ்சம் வாங்கிய காங்கயம் தாசில்தாரை லஞ்ச ஒழிப்பு போலீசார் கைது செய்தனர்.

திருப்பூர் மாவட்டம் காங்கயம் தாலுகாவில் தாசில்தாராக பழனியை சேர்ந்த சிவகாமி (38) என்பவர் பணியாற்றி வருகிறார். இந்நிலையில் தாசில்தார் சிவகாமி சொத்து மதிப்பு சான்று உள்ளிட்ட பல் வேறு சான்றுகளுக்கு லஞ்சம் பெற்று வருவதாக லஞ்ச ஒழிப்புத்துறைக்கு பல்வேறு புகார்கள் வந்தது. இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு காங்கேயத்தை சேர்ந்த ஒருவர் தான் ஒப்பந்த தொழில் தொடங்க ரூ.75 லட்சத்துக்கான கடனீட்டு சான்றிதழ் வழங்கக்கோரி காங்கயம் தாலுகாவில் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசிலனை செய்ய தாசில்தார் சிவகாமி தனக்கு ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் கொடுக்க வேண்டும் என கேட்டதாகவும், பின்னர் இதனை குறைத்து ரூ.60 ஆயிரம் தர வேண்டும் என கேட்டதாகவும் கூறப்படுகிறது. இது குறித்து சம்பந்தப்பட்ட நபர் திருப்பூர் லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் கொடுத்தார். லஞ்ச ஒழிப்பு போலீசார் ஆலோசனைப்படி நேற்று அந்த நபர் ரசாயனம் தடவிய ரூபாய் நோட்டுகள் ரூ.60 ஆயிரத்தை தாசில்தார் சிவகாமியிடம் கொடுத்துள்ளார்.

அப்போது மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் தாசில்தார் சிவகாமியை கையும் களவுமாக பிடித்தனர். பின்னர் போலீசார் வழக்கு பதிந்து கைது செய்தனர். மேலும், அவரிடம் 3 மணி நேரத்திற்கு மேலாக விசாரணையும் நடத்தினர்.

இந்த சம்பவத்தால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

தினகரன் Fri, 28 January 2022 https://epaper.dinakaran.com/c/65878

# ரூ.4,500 லஞ்சம் வாங்கிய சேலம் வி.ஏ.ஓ., கைது

சேலம், பிப். 3-

வாரிசு சான்றிதழ் வழங்க, 4,500 ரூபாய் லஞ்சம் வாங்கிய வி.ஏ.ஓ.,வை போலீசார் கைது செய்தனர்.

சேலம், அழகாபுரத்தை சேர்ந்தவர் கைலாசநாயுடு, 75. இவர், 2020ல் கொரோனாவால் உயிரிழந்தார். இதனால், கொரோனா இறப்பு நிதி பெற, சொத்துகளை பிரிக்க, அவரது மூத்த மகளான, அதே பகுதியை சேர்ந்த மாதேஸ்வரி, 50, வாரிசு சான்றிதழ் வேண்டி, இசேவை மையம் மூலம் விண்ணப்பித்தார்.

இதுதொடர்பாக, மாதேஸ்வரி தங்கை மகனான, வாழப்பாடியை சேர்ந்த தினேஷ்குமார், 25, அழகாபுரம் வி.ஏ.ஓ.,வான, அரிசிபாளையத்தை சேர்ந்த குமரேசன், 38, என்பவரை தொடர்பு கொண்டு பேசினார். அப்போது, 5,000 ரூபாய் கேட்டு, பேரம் பேசி, 4,500 ரூபாய்க்கு சான்றிதழ் வழங்க சம்மதித்தார். தினேஷ்குமார் பணம் வழங்க தயாராகியும், குமரேசன் அலைக்கழித்து வந்தார்.

இதனால், சேலம் லஞ்ச ஒழிப்புத்துறையில் தினேஷ்குமார் புகார் அளித்தார். இன்ஸ்பெக்டர் ரவிக்குமார் தலைமையில் போலீசார் வழங்கிய அறிவுரைப்படி, நேற்று மதியம், 3:00 மணிக்கு, தினேஷ்குமார், மாதேஸ்வரி ஆகியோர், ரசாயன பவுடர் தடவிய, 4,500 ரூபாயை, அழகாபுரம் வி.ஏ.ஓ., அலுவலகத்தில் இருந்த குமரேசனிடம் வழங்கினர். அப்போது, போலீசார், குமரேசனை கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர்.

தினமலர் மதுரை | ஞாயிறு | 23.1.2022

# பேரூராட்சி அலுவலருக்கு ரூ.3 ஆயிரம் அபராதம்

## தகவல் ஆணையம் உத்தரவு

**போடி, ஜன. 23-** தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் உரிய தகவல் வழங்காத மேலச்சொக்கநாதபுரம்பேரூராட்சி பொது தகவல் அலுவலருக்கு ரூ.3 ஆயிரம் அபராதம் விதித்து மாநில தகவல் ஆணையர் முத்துராஜ் உத்தரவிட்டார்.

போடி மேலச்சொக்கநாதபுரத்தை சேர்ந்தவர் ராமகிருஷ்ணன். இவர் மூன்று ஆண்டுகளுக்கு முன் அப்பகுதியில் சென்ற போது, மின் மோட்டார் மூலம் பொது குடிநீர் குழாயிலிருந்து தண்ணீர் பிடித்து தனிநபர் கட்டுமான பணிகளுக்கு பயன் படுத்தியுள்ளார். இது குறித்து 2019 செப்.,16ல் பேரூராட்சி நிர்வாக அலுவலர், அதிகாரிகளிடம் புகார் செய்தார். புகார் மீது நடவடிக்கை இல்லாததால் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்தார். உரிய பதில் இல்லாததால் மாநில தகவல் ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்தார். இம் மனு மீது 2020 டிச. 12ல் விசாரணை நடந்தது.

மாநில தகவல் ஆணையர் முத்துராஜ் விசாரணையில், மனுதாரருக்கு ஒரு வாரத்திற்குள் பதில் வழங்க உத்தரவிட்டார். அதன் பின்பும் தகவல் வழங்காததால் மேலச்சொக்கநாதபுரம்பேரூராட்சி பொதுத்தகவல் அலுவலர் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் படி ரூ.3 ஆயிரம் அபராதம் அரசுக்கு செலுத்த வேண்டும். இத்தொகையை 30 நாட்களுக்குள் அரசுக்கு செலுத்தி அதனை தகவல் ஆணையத்திற்கு தெரிவிக்க உத்தரவிட்டுள்ளார்.

இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

நேர்மை நெறி- பிப்ரவரி 2022

Registered with the Registrar of News Papers for India, New Delhi, Regn.No.TNBIL/2003/10419

SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20

# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் **திங்களிதழ்**

ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்

வெளியீட்டுச்செயலாளர்: ஜி கோவிந்தசாமி

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 Feb 2022
Due to corona published online)

**நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;**
**மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்!**

## மத்திய பட்ஜெட் 2022-23 (ஒரு பார்வை)

| | |
|---|---|
| வருவாய் | ரூ 22,84 லட்சம் கோடி |
| செலவு | ரூ 39.45 ல்ட்சம் கோடி |
| பற்றாக்குறை | ரூ 16.61 லட்சம் கோடி |
| பொதுத்துறை விற்றல் | ரூ 65,000 கோடி |

### ஒரு ரூபாய் வருமானத்தில் (100 பைசா)

| | |
|---|---|
| ஜிஎஸ்டி | 16 பைசா |
| நிறுவன வரி | 15 பைசா |
| வருமான வரி | 15 பைசா |
| சுங்க/கலால் வரி | 12 பைசா |
| கடன் பத்திரங்கள் | 35 பைசா |
| பங்கு விலக்கு | 5 பைசா |
| மற்ற மூலதனங்கள் | 2 பைசா |

### ஒரு ரூபாய் செலவில் (100 பைசா)

| | |
|---|---|
| மாநில வரி பங்கீடு | 17 பைசா |
| ராணுவம் | 8 பைசா |
| ஓய்வூதியம் | 4 பைசா |
| மானியங்கள் | 8 பைசா |
| மத்திய அரசு கடன் | 20 பைசா |
| மத்திய திட்டங்கள் | 15 பைசா |
| நிதிக்குழு திட்டங்கள் | 10 பைசா |
| மற்ற திட்டங்கள் | 9 பைசா |
| சிறு செலவீனங்கள் | 9 பைசா |

**ஊழல் பெருச்சாளி இன்மையேல் வரவு 10000 லட்சம் கோடியாகவும் திட்ட செலவினம் ஒரு ரூபாய்க்கு 50 பைசாவுக்கும் மேலும் இருக்கும். ஊழலற்ற ஆட்சிக்காக நம்மை அர்ப்பணிப்போம்.**

**ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் தானும் ஊழல் செய்யாமல் ஊழலை ஒழிக்க ஒரு நிமிடம் குறித்து ஒரு நிமிடம் சிந்தித்தாலே ஊழல் தானாக ஒழிந்துவிடும்**

*பெறுநர்*

---

IF UNDELIVERED, PLEASE RETURN TO
ACM, 155, KONNUR HIGH ROAD, AYANAVARAM, CHENNAI-23

Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155 "Nambakam" Konnur High Road, Ayanavaram, Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan

இலஞ்சம் கொடுக்காதீர்! கொடுக்க விடாதீர்!! இலஞ்சம் வாங்காதீர்! வாங்க விடாதீர்!